**செய்தி வெளியீடு எண்: 08/01/2021** **நாள்: 26.01.2021**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் 72-வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது**

கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலகத்தில் 72வது குடியரசு தின விழா இன்று (26.01.2021) நடைபெற்றது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

குடியரசு தின விழா கொண்டாட்டத்தின் போது சக ஊழியர்களிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சுறுசுறுப்பான நடை, இறகுபந்து, டேபிள் டென்னிஸ், கேரம் ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. இதில், வெற்றி பெற்ற 48 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகள் மற்றும் சான்றிழதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திருமதி. சுஜாதா ஜெயராஜ் (நிதி), திரு. ராஜீவ் நாராயண் திவேதி (திட்டங்கள்) மற்றும் திரு. ராஜேஷ் சதுர்வேதி (இயக்கம் மற்றும் அமைப்புகள்), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தனி மனித இடைவெளியை கடைபிடித்து பங்கேற்றனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**